**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 47/2021** **Date:01.07.2026.**

**(DW1)- நிக்கோலஸ்**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் எந்த ஆண்டு தயார் பன்னது என்றால் நினைவில்லை. மேற்படி ஆவணம் எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். உயில் பத்திரம் எழுதுவதற்கு முன்பு சொத்து முழுவதும் ஒரே சொத்தாக இருந்தது என்றால் சரியல்ல, எனது அப்பாவிற்கு உள்ள சொத்து தனியாக இருந்தது. 2017 ல் எனது தம்பி எனது பெயரில் ஒரு இஷ்டதானம் எழுதிக்கொடுத்தார் என்றால் என்னை கையெழுத்து போடச்சொன்னர் நான் போட்டு கொடுத்தேன். எனது தம்பி ஜோஸ்சப் பாத் எனது பெயரில் ஆவண எண் 2457/2017 என்ற செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி ஆவணம் என்றால் நான் மேற்படி ஆவணத்தை தற்போது தான் பார்கிறேன். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் தெற்கு மற்றும் மேற்கு எல்கையாக குடும்ப பொது பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை நான் தான் அனுபவம் செய்துவருகிறேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தையும் சேர்த்துதான் நான் எனது மகனுக்கு உயில் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழகிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**